# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.69/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 10 | நாள் | : | 27.01.2026 |
| பெயர் | : | சங்கர் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 27th day of January 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பாறைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நெற்கட்டும்செவல் காளியம்மன் கோவிலில் பூசாரியாக இருந்து வருகிறேன். விவசாய வேலையும் செய்து வருகிறேன். எங்கள் ஊரில் இருதரப்பினருக்கும் தகராறு ஏற்பட்டு இருதரப்பினரும் மருத்துவமனைக்குச் சென்றார்கள் அதன்பின்னர் சுமார் காலை 10.30 மணியளவில் காளியம்மன் கோவிலில் வைத்து போலீசார் கையெழுத்துக் கேட்டார்கள் இரண்டு கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். என்ன காரணத்திற்காக கையெழுத்துக் கேட்டார்கள் என்று எனக்கு தெரியாது. என் முன்பாக எந்த பொருளும் எடுத்துக் கொடுக்கவில்லை. ஆஜர் எதிரிகளைத் தெரியும். லட்சுமணப்பாண்டியன் மகன் மாரிச்சாமியைத் தெரியாது. ஆஜர் 2 ம் எதிரியைத்

தெரியும். அவர் என் முன்பாக கையெழுத்து ஏதும் செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும் கையொப்பம் அ.சா.ஆ.2 மற்றும் அத்தாட்சியில் காணப்படும் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும். சிவஞானபாண்டியன் மகன் வெள்ளத்துரையை யார் என்று தெரியாது. நான் மட்டும்தான் கையெழுத்துப் போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலீசார் விசாரணையில் 02.08.2016ம் தேதி மாலை 4 மணிக்கு எனது சொந்த வேலை விஷயமாக புளியங்குடி காவல் நிலையம் சென்றிருந்தபோது புளியங்குடி காவல் நிலைய கு.எண்.135/2016 வழக்கின் புலனாய்வு அலுவலரான ஆய்வாளர் என் முன்பாகவும், வெள்ளத்துரை என்பவர் முன்பாகவும் 2ம் எதிரி மாரிச்சாமி என்பவரை விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதை ஆய்வாளர் என் முன்பாகவும் வெள்ளத்துரை முன்பாகவும் கணினியில் பதிவு செய்தார் என்றும் அதன்பின்னர் மாரிச்சாமி மாலை 6.15 மணிக்கு நெற்கட்டும்செவல் நடுத்தெருவில் தெற்கு பார்த்து அமைந்துள்ள அவரது வீட்டின் முன்புறமுள்ள குளியல் அறையில் மேலே போட்டு வைத்திருந்த அரிவாளையும், கம்பியையும் எடுத்து வந்து குற்றச் செயலுக்காக பயன்படுத்தியதாக கூறி அடையாளம் காட்டி ஆஜர்படுத்தினார் என்றும் அதை

ஆய்வாளர் என் முன்பாகவும், வெள்ளத்துரை முன்பாகவும் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த கோவிலில் எதிரிகள் அனைவரும் வந்து சாமி கும்பிட்டு செல்வபவர்கள் என்பதால் எனக்கு அவர்களை நன்கு தெரியும். அந்த வகையில் எதிரிகளைத் தெரியும். அதனால் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.01.27 17:46:59 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.69/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 9 | நாள் | : | 27.01.2026 |
| பெயர் | : | சுப்பிரமணியத்தாய் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 27th day of January 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் நெல்கட்டும் செவலில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெள்ளத்துரை என் கணவர் . எதிரிகளை தெரியும். சாட்சிகள் பூசைத்தாய், மகேந்திரன், உள்ளமுடையார், முருகையா, அருணாசலம், வெள்ளத்துரை, மாரிச்சாமி, வெள்ளத்தாய், செல்லத்தாய், குருநாதன், காசிராஜன், கல்யாணித்தாய் ஆகியோர்களைத் தெரியும். எங்கள் ஊரில் உள்ள காளியம்மன் கோவில் திருவிழா ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடைபெறும். மாசிமாதம் உள்ளமுடையார் கோவில் விழா நடைபெறும். 1ம் எதிரி பாண்டியராஜா உள்ளாட்சி தேர்வு செய்யப்பட்ட பின்னர் எங்கள் ஊர் திருவிழாவில் பிரச்சினை ஏற்பட்டது. வழக்கமாக எங்கள் ஊரில் திருவிழா நடக்கும்போது பூலித்தேவர் வாரிசுகளில்

ஒருவரை ஊர்வலமாக அழைத்து வந்து சாமி கும்பிட்டு வந்தோம். அவ்வாறு அழைத்து வந்த நிகழ்ச்சியில் கோமதி முத்துராணியை தற்போது அழைத்து வந்து விழா கொண்டாடினோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக மட்டும் திருவிழா நடந்தது. இடையில் இந்த வழக்கு பிரச்சினை ஏற்பட்டதால் சில காலம் திருவிழா நடக்கவில்லை. 1 ம் எதிரி தரப்பினர் ஒரு பிரிவாகவும், நாங்கள் கோமதிமுத்துராணி தரப்பில் ஒரு பிரிவாகவும் இருந்து வந்தோம். பாண்டியராஜா தரப்பினர் அழைக்கக்கூடாது என்று கூறி வந்தனர். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள்காலை 7.30 மணி முதல் 8.30 வரைக்குள் பூலித்தேவர் சிலைக்கு அருகில் உள்ள மண்டபத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றோம். அறங்காவலர் துறையினர் வருவதாகவும், அனைவரும் சேர்ந்து சாமி கும்பிடலாம் என்று என் கணவர் சொன்னதால் நாங்கள் அனைவரும் மண்டபத்திற்கு சென்றோம். சுமார் 200 பேர் மண்டபத்தில் இருந்தோம். அப்போது காளியம்மன் கோவிலில் குலவை சத்தமும், மேளச்சத்தமும் கேட்டது. எனவே நாங்கள் அனைவரும் கோயிலை நோக்கி பிள்ளையார் கோவில் தெரு வழியாக வடக்கு நோக்கி சென்றோம். ரைஸ் மில் அருகே செல்லும்போது சுமார் 100 பேர் கோயிலில் இருந்து கம்பு, அருவாள் உடன் எங்கள் பின்னால் வந்து விரட்டினார்கள். எதிரி தரப்பினர் வாய்க்கு வராத அவதூறான சொற்களை பேசி எங்களை கல்லால் அடித்து காயப்படுத்தினார்கள். கல்யாணி, வெள்ளத்துரை, முருகையா, உள்ளமுடையார், மற்றொரு வெள்ளத்துரை, கடவுள் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது எனக்கு காயம்

ஏற்படவில்லை. கம்பாலும், கல்லாலும் எங்களை தாக்கினார்கள் நாங்கள் ஓடிவிட்டோம். 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். தங்கத்துரையை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு அவர் இறந்து போனார். என்னுடன் வந்தவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது 03.05.2016 ம் தேதி காலையில் முத்தையா தேவர் மகன் வெள்ளத்துரை தலைமையில் நாங்கள் அனைவரும் புறப்பட்டுச் சென்றோம் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறியபோது லட்சுமணப்பாண்டியன் மகன் மாரிச்சாமி, இராமையத்தேவர் மகன் அசோகன் என்ற வெள்ளத்துரை, இராமராஜா மகன் பொன்னுசாமி, பொன்னையா தேவர் மகன் கோட்டியப்பன், இராஜதேவர் மகன் பாண்டித்துரை, பாண்டித்துரை மனைவி ராஜேஸ்வரி, பாண்டியத் தேவர் மகன் செந்தூர் பாண்டி, குருசாமி பாண்டியன் மனைவி வெள்ளத்துரைச்சி, சுந்தரய்யா தேவர் மகன் செந்தூர் பாண்டி, சங்கையா தேவர் மகன் சுப்பையா, பெரிய சுப்பையா மகன் உள்ளமுடையார், முத்துப்பாண்டியன் மனைவி வெள்ளத்துரைச்சாமி, வெள்ளப்பாண்டி மகன் உள்ளமுடையார், தங்கச்சாமி மகன்

ராஜா, தமிழ்செல்வன் மனைவி வெள்ளத்துரைச்சி, முருகன் மனைவி வெள்ளத்துரைச்சி, உள்ளமுடையார் மனைவி பூங்கோடி, முத்துப்பாண்டியன் மகன் வெள்ளத்துரை, இராமபாண்டியன் மனைவி வெள்ளத்துரைச்சி, சண்முகையா மகன் வெள்ளத்துரை, மற்றும் உடையார், உடையார் மகன் முருகன், கைலாசத்தேவர் மகன் பால்பாண்டி, ஆகியோர் வந்தார்கள் என்று அவர்கள் பெயர் விவரம் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். புண்ட மக்களா கூட்டமாக வந்திருக்கிறிர்கள் எல்லா கூதிவில்லைகளும் இன்றோடு செத்துதொலைங்க என்று கூறி கண்டபடி அடித்தார்கள் என்றும் பாண்டியராஜனும், பொன்னுச்சாமியும் கல்லால் வெள்ளத்துரையை அவதூறாக பேசிக்கொண்டே நீ இத்தோடு செத்து அழிந்துபோ என்று கூறி பாண்டியராஜன் கல்லால் எரிந்தார் என்றும் வெள்ளத்துரைக்கு இடது நெற்றியில் காயம் ஏற்பட்டது என்றும் பொன்னுச்சாமி இத்தோடு தொலைந்துபோ என்று கூறி கல்லால் கூறி பார்த்து எறிந்தார் என்றும் அதை வெள்ளத்துரை கையால் தடுத்தபோது வலது உள்ளங்கை மற்றும் நடுவிரல் இடது ஆட்காட்டிவிரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றும் கோட்டியப்பன் கம்பால் இடது முழங்கையில் வெள்ளத்துரையை தாக்கினார் என்றும் லட்சுமணத்துரை மகன் மாரிச்சாமி கம்பியல் தங்கதுரையை பார்த்து தொலைந்துபோ புண்டை மகனே என்று சொல்லி ஓங்கி தலையில் அடித்தார் என்றும் மாரிச்சாமி காசிராஜனை அரிவாளால் தொலைந்துபோ தேவிடியா மகனே என்று தலையை நோக்கி வெட்டினார் என்றும் அதை இடது கையால் தடுத்ததால் காசிராஜனுக்கு இடது கையிலும், புஜம் பகுதியிலும்

இரத்தக்கறை ஏற்பட்டது என்றும் பாண்டித்துரையும், வேலுச்சாமியும் கல்லால் மாறி மாறி தாக்கினார்கள் என்றும் எனவே குருநாதன் இடது கரண்டைக்கால் இடதுகால் முட்டியில் காயங்கள் ஏற்பட்டது என்றும் சுப்பிரமணியத்தாய் கல்லால் கல்யாணித்தாய் மீது அவதூறாக பேசிக் கொண்டே எறிந்தார் என்றும் அசோகன் என்ற வெள்ளத்துரை கண்டாரயோளிகளா என்று சொல்லி ஓங்கி கல்யாணிதாய் தலையில் ஓங்கி அடித்தார்கள் என்றும் பொன்னுச்சாமி மகன் வெள்ளத்துரையிம் கல்யாணிதாய் மீது கல்லால் எறிந்தார்கள் என்றும் கல்யாணித்தாய்க்கு தலையின் பின்புறமும், வலது தோள்பட்டையிலும் கரண்டைக்காலிலும் காயங்கள் ஏற்பட்டது என்றும் ராஜேஸ்வரி கல்லைக் கொண்டு என் மீது மாறி மாறி எறிந்தார் என்றும் என்னுடைய இடது கண்ணுக்கு அருகிலும், வலது குதிங்கால் பக்கமும் காயங்கள் ஏற்பட்டது என்றும் நாங்கள் உயிருக்கு பயந்து நாலாபுறமும் சிதறி ஓடினோம் என்றும் என்னை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் அங்கு நான் சிகிச்சையிலிருந்தபோது புளியங்குடி காவல் உதவி ஆய்வாளர் நடந்த விவரத்திற்கு என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் வெள்ளத்துரையும் மருத்துவமனையில் இருந்து புகார் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி ராஜேஸ்வரி எனக்கு அக்கா முறை வேண்டும் மற்ற எதிரிகள் எனக்கு உறவினர்கள்தான். எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களை குற்ற வழக்கிலிருந்து காப்பாற்றும்

**நோக்கத்துடன் எனக்கு காயம்பட்ட விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.01.27 17:47:07 +0530